# பாலிந்தநுவர பிரதேச சபை

## கழுத்துறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனையிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிகமையவும் பாலிந்தநுவர பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாலிந்தநுவர பிரதேச சபையின் செயற்பாட்டு நிலவரத்தையும் அத் தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது நிருவாகம் மற்றும் சுகாதார சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சம்பளம் மற்றும் படிகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் முறையே ரூபா 123,707 மற்றும் ரூபா 44,284 தொகைகளும் வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 118,719 தொகைகள் மற்றும்

ரூபா 42,166 தொகைகள் என குறிப்பிடப்படாதிருந்தமையினால் ரூபா 7,106 தொகை குறைவாக கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) பௌதீக வளங்கள், வீதிகள் மற்றும் காணி கட்டிடங்களின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செலவினத் தலைப்பு 309 இல் கழிக்கப்பட வேண்டிய ரூபா 67,356 தொகை எஞ்சிய இருப்புத் தலைப்பு 303 இலிருந்து கழிக்கப்பட்டிருந்தது.

(இ) இரண்டாவது நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 222,300 தொகையானது ரூபா 182,635 எனக் கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஈ) கிடைக்க வேண்டிய மூலதன மானியம் ரூபா 82,650 தொகை கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 195,000 ஆன விழா முற்பணம் மற்றும் ரூபா 80,000 ஆன விசேட முற்பணம் என்பன சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஊ) பின்னைய வருடங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 2,945 ஆன வீத வரி முற்பணப் பெறுகைகளாக கணக்குகளுக்கு கொண்டு வரப்படாமல் நிலுவையாக இருந்த ஆதன வரி மீதியிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) வேலைக் களஞ்சிய இருப்பு மீதியான ரூபா 81,486 தொகையினுள் ரூபா 14,130 தொகையான பொருள் இருப்பு பதிவேட்டு விடயங்களின் பெறுமதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்கள் தொடர்பான நிதிக் கூற்றுக்களின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,167,982 ஆக காணப்பட்டதுடன் அதற்குரிய துணைப் பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 7,564,155 ஆகும்.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 4,526,715 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 603,439 தொகையான கணக்கு மீதிகளையும், ரூபா 1,552,026 தொகையான கொடுக்கல் வாங்கல்களையும் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாண அறிவுறுத்தல்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(2) (ஆ) மற்றும் 371(2) (இ) ஆம் பந்திகள் | எந்தச் செயற்பாட்டிற்காகவும் வழங்கப்படுகின்ற முற்பணம் உரிய செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 மார்ச் 09 வரையான காலப்பகுதியில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 19,858 தொகையான முற்பணம் 2011 ஏப்ரல் வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | ஒரு நடைமுறைக் கணக்கிற்குரிய 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்திருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 38,802 கூட்டுத்தொகையான 08 காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 756 | ஒவ்வொரு வருட இறுதியிலும் பொருள் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தும் 2007 திசெம்பர் 31 இன் பின்னர் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 1645 (அ) | வாகனங்கள் தொடர்பாக வாகன சம்பவத்திரட்டுப் புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 1647(உ), நி.பி II ஆம் பகுதியின் உப பட்டோலை | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பேணப்பட வேண்டிய வாகனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2004 யூலை 09 ஆம் திகதிய LG/05/2004 ஆம் இலக்க சுற்று நிரூபத்தின் 2 ஆம் பந்தி | உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான காசு, உபகரணங்கள். களஞ்சியம் போன்ற சகல வகையான சொத்துக்களிலும் பொறுப்பாக இருக்கின்ற மற்றும் வருமானங்களைச் சேகரிக்கின்ற |

உத்தியோகத்தர்கள் போன்றவர்களிடமிருந்து போதியளவான பிணைப் பணத்தை அறவீடு செய்வது செயலாளரின் பொறுப்பாக இருந்த போதிலும் சபையில் மேற்கூறப்பட்ட கடமைகளைப் புரிகின்ற எவ்வித உத்தியோகத்தர்களிடமிருந்தும் பிணைப்பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,691,100 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,837,225 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறை வரிகள் அதிகாரச் சட்டத்தின் 153,160,165 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஒரு மாதத்திற்கு ரூபா 50,000 அல்லது வருடமொன்றிற்கு ரூபா 500,000 இனை விஞ்சுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவிற்காக செலுத்துகின்ற பணத்தில் 5% நிறுத்தி வைக்கப்பட்டு அத் தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2010 ஏப்ரல் மற்றும் மே மாதங்களின் கொடுப்பனவுகளில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய ரூபா 112,792 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒரு வருமான விடயம் மற்றும் 07 செலவின விடயங்களின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 10% தொடக்கம் 236% வரையான வீச்சினுள் சாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் 07 வருமான விடயங்கள் மற்றும் ஒரு செலவின விடயத்தில் 07% தொடக்கம் 90% வரையான வீச்சினுள் பாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் பாதீடானது சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

(அ) மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றி தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பீடு | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | மதிப்பீடு | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீத வரி மற்றும் வரி | 1,101 | 1,078 | 24 | 867 | 768 | 99 |
| (ii) | வாடகை | 525 | 525 | - | 405 | 405 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 147 | 147 | - | 124 | 124 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 1,890 | 1,890 | - | 1,799 | 1,809 | (10) |

(ஆ) நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,321 ஆன நிலுவை வாடகை மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அத்திகதியில் நிலுவை வாடகை மீதியொன்று காணப்படவில்லை.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவு விடயம் | பாதீடு | உள்ளவாறான | முரண் | பாதீடு | உள்ளவாறான | முரண் |
| **மீண்டு வரும் செலவுகள்** | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| ஆளுக்குரிய வேதனம் | 13,857 | 11,292 | 2,565 | 11,741 | 8,947 | 2,794 |
| ஏனையவை | 11,022 | 4,606 | 6,416 | 5,060 | 6,873 | (1,813) |
| உப கூட்டுத் தொகை | 24,879 | 15,898 | 8,981 | 16,801 | 15,820 | 981 |
| மூலதன செலவுகள் | 19,252 | 30,701 | (11,449) | 39,090 | 2,356 | 36,734 |
| மொத்தக் கூட்டுத் தொகை | 44,131 | 46,599 | (2,468) | 55,891 | 18,176 | 37,715 |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்**

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன

| பதவியினர் தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | 01 |
| இரண்டாம் தரத்தினர் | 10 | 06 |
| ஆரம்ப தரத்தினர் | 42 | 40 |
| ஏனைய (அமைய, தற்காலிக) | - | 04 |

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,410,345 ஆக இருந்தது.

### 2.6.2 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 24,935,494 ஆக இருந்தது.

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### சீருடைக் கொடுப்பனவு செலுத்துதல்

1997 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் (மே.மா) தெ/முல/2/9/97 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் சீருடைகளுக்கு காசாகச் செலுத்த முடியாதிருந்தமையும் சீருடைகளே வழங்க வேண்டியிருந்தமையும் அறிவுறுத்தப்பட்டிருந்தும் 32 சீருடை பெறுனர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 16,075 தொகை காசாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

### 2.8.1 சபைக்குரிய வீதிகள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டின் பின்னர் சபையினால் கையேற்கப்பட்டிருந்த அல்லது சபைக்குச் சொந்தமான 273 வீதிகள் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.8.2 இருப்புக் கட்டுப்பாடு

(i) வீதி அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக உறுப்பினர்களின் வேண்டுகோளின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஹியூம் குழாய்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவைகள் பொருத்தப்பட்டிருந்த இடங்கள் தொடர்பான எவ்வித அறிக்கையும் காணப்படாததுடன் 2010 ஆம் ஆண்டின் போது இரண்டு உறுப்பினர்களினால் கோரப்பட்டு சபையினால் கொள்வனவு செய்யப்பட்டு தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் அவ் இரண்டு உறுப்பினர்களுக்கும் விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 52,500 தொகையான 10 ஹியூம் குழாய்கள் பொருத்தப்பட்டிருந்த இடங்கள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மின்சாரப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவின் போது களஞ்சியத் தேவைப்பாடுகள் தொடர்பாக களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரின் வேண்டுகோளின்றி உறுப்பினர்களின் வேண்டுகோளிற்கு இணங்க மின்சாரப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) 2010 திசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 297,455 தொகையான மின்சாரப் பொருட்கள் தலைவருக்கும் இரண்டு உறுப்பினர்களுக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மூலம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அவைகள் பொருத்தப்பட்டிருந்த இடங்கள் தொடர்பான அறிக்கை காணப்படவில்லை. ஒரு நாளைக்கு பொருந்தக் கூடிய அளவின் அடிப்படையில் விநியோகிக்கப்படாமல் ஒரு தடவையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொருட்கள் யாவும் (அதிகமாக ஒரு தடவையில் ரூபா 50,000

மட்டிலான கொள்வனவுகள்) தொழில் நுட்ப உத்தியோகத்தருக்கு ஒரே தடவையில் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(iv) மின்சாரப் பொருட்கள் புதிதாக பொருத்தப்படும் போது களஞ்சியத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த கழற்றி அகற்றப்பட்ட பொருட்கள் தொடர்பான அறிக்கை காணப்படவில்லை.

(v) சபை அதிகாரப் பிரதேசத்தினுள் மின் கம்பங்கள் இலக்கமிடப்பட்டிருக்கவில்லை.

(vi) 2010 ஒக்தோபர் 29 ஆந் திகதி பொருள் கட்டளை இல 295 இன் மூலம் கட்டளையிடப்பட்டிருந்த ரூபா 6,000 பெறுமதியான 75 பொது மின் ஆழிகள் 2010 நவம்பர் 09 ஆந் திகதி விநியோகக் கட்டளை இல . 001222 இன் மூலம் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அவ் இருப்புக்கள் இருப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 2.8.3 காணி கையேற்ப்புக்கள்

2006 ஆம் ஆண்டின் போது ஏலமிடப்பட்டிருந்த 3 ஏக்கர், 1றூட், 21 பேர்சஸ் உடைய பெல்லன தியன்தகொடலன்த காணியில் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 51 பேர்சஸ் காணித்துண்டு கணக்காய்வுத் திகதியான 2011 சனவரி 26 ஆந் திகதி வரையிலும் சபையினால் கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 ஒப்பந்த நிருவாகம்

### 2.9.1 சந்தை வளவில் கடைகள் நிர்மாணித்தல் - இரண்டாவது செயற்திட்டத்தின் I ஆம் கட்டம்

2009 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்காக ரூபா 11,000,000 தொகை மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 9,675,300 தொகையான ஒப்பந்தப் பெறுமதியின் கீழ் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2010 சனவரி 28 ஆந் திகதி செயற்திட்டத்திற்காக நடாத்தப்பட்டிருந்த செயற்திட்ட கொள்வனவு மதிப்பீட்டு குழுவிற்காக சிவில் பொறியியலாளர் மற்றும் மாவட்ட பொறியியலாளர் என்போர் பங்கு பற்றியிருக்கவில்லை.

(ii) தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிலும் பொறியியலாளர் பங்கு பற்றியிருக்கவில்லை.

(iii) கொள்வனவு வழிகாட்டிக் கோவை 2006 இன் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் நிர்மாண ஒப்பந்தங்களின் போது ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய முற்பணம் செலவின மதிப்பீட்டில் 20% ஆக இருக்க வேண்டியிருந்தும் இவ் ஒப்பந்தக்காரருக்கு 25% முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 483,765 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) கடைகள் நிர்மாணிப்பதற்குரிய மதிப்பீடு மற்றும் திட்டங்கள் தயாரிப்பதற்காக தனியார் பட்டயப் பொறியியலாளர் ஒருவருக்கு ரூபா 60,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(v) நிர்மாணித்தலுக்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளின் பிரதியொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) சகல கடைகளுக்கும் உயர் வகையைச் சேர்ந்த அலுமினியக் கதவுகள் பொருத்தப்பட்டு நிறப் பூச்சுக்களை பூசுவதற்காக இணங்கப்பட்ட மதிப்பீட்டின் வேலை விடய இல 24 இன் கீழ் 1,560 சதுர அடிக்காக ரூபா 1,560,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இறுதிக் கொடுப்பனவுக்குரிய அளவிடைப் பத்திரங்களின் பிரகாரம் அதற்காக 1791.75 சதுர அடிக்கு ரூபா 1,791,150 தொகை செலுத்தப்பட்டிருந்தமையினால் மதிப்பீட்டுத் தொகையை விஞ்சி ரூபா 231,150 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்தப்பட்டிருந்தும் கதவுகள் பொருத்தும் போது ஏற்பட்ட குறைவுகளுக்காக அமானோ தகரம் கொள்வனவு செய்ததாகக் குறிப்பிட்டு மேலதிக வேலைகளுக்காக ரூபா 35,910 தொகை மேலதிகக் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீட்டுத் தொகையை விஞ்சி ரூபா 267,060 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(vii) 2011 சனவரி 26 ஆந் திகதி கடைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அதன் சுவரின் பின்பக்கம் வெடித்துக் காணப்பட்டதுடன் படிக்கட்டுகளின் அருகிலுள்ள சுவர்களில் பெரியளவிலான வெடிப்புக்களும் இல 3, 4, 5 ஆம் கடைகளின் சுவர்களின் உட்பக்கமும் வெடித்துக் காணப்பட்டது.

(viii) கடைகளுக்கான முற்கொடுப்பணவுத் தொகைகள் மற்றும் வாடகைப் பணங்கள் என்பவைகளைத் தீர்மானிப்பதற்காக அரச பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையொன்று காணப்படவில்லை.

(ix) நிர்மாணிக்கப்பட்டிருந்த 14 கடைகளில் 03 கடைகள் 2011 சனவரி வரையிலும் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. சகல கடைகளும் வாடகைக்கு விடப்படுவதன் மூலம் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட முற்கொடுப்பனவுத் தொகை ரூபா 11,550,000 ஆக இருந்த போதிலும் கிடைத்த பணம் ரூபா 9,075,000 ஆகும்.

### 2.9.2 வீதி அபிவிருத்தி செய்தல்

(i) 81.9 மீற்றர் நீள களுகல, மகுர மயான வீதி, 54 மீற்றர் நீள மகுர புவக்கஹதெனிய வீதி மற்றும் 37 மீற்றர் நீள லத்பந்துர, குருந்துவத்த வீதி என்பவற்றிற்கு கொங்ரீட் இடுதலின் போது அவ் வீதிகள் பாதுகாப்பு முட்டுக்கள் வைக்கப்படாமல் கொங்கிரீட் இடப்பட்டிருந்தமை பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ii) களுகல, மகுர மயான வீதி ஆரம்பம் தொடக்கம் 45 மீற்றரிலும், மகுர, புவக்கஹ தெனிய வீதி ஆரம்பம் தொடக்கம் 47 மீற்றரிலும் லத்பந்துர குருந்து வத்த வீதி ஆரம்பம் தொடக்கம் 26.8 மீற்றரிலும் குறுக்கு பக்கத்தில் வெடிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயகக் குடியரசின் நிதிப்பிரமாணம் இல. 133, 134 மற்றும் 2008 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் WP/LGD/10/2008 ஆம் இலக்க சுற்று நிரூபத்தின் பிரகாரமும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு